08. ஒரு திண்மக்கோளத்தின் திணிவு 1Kg இதன் சாரடர்த்தி $0^{0}C$ யில் 8.93 இதன் வெப்பநிலை $15^{0} - 500^{0}C$ ற்கு உயர்த்தும் போது அதன் மேற்பரப்பு அதிகரிக்கும் வீதம் யாது.?
$\alpha = 16.07 \times 10^{-6\ 0}C^{-1}$

09. இரு $L_1$ நீளங்கள் உள்ள கோல்களின் ஏகபரிமாண விரிகைத்திறன் $\alpha_1$, மூன்றாவது கோலொன்றின் ஏகபரிமாண விரிகைத்திறன் $\alpha_2$ இவற்றை கொண்டு ஆக்கப்பட்ட முக்கோணி ABC யில் CD யின் நீளத்தில் வெப்பநிலை மாற்றம் ஏற்படும் போது மாற்றம் ஏற்படவில்லை எனின் $4l_1^2\alpha = l_2^2\alpha_2$ எனக் காட்டுக. (இங்கு AB இன் நடுப்புள்ளி D)

10. ஒரு கண்ணாடி அளவியின் $50Cm^3$ அளவிடை புள்ளியிற்கு இரசம் $28^{0}C$ யில் நிரப்பப்பட்டுள்ளது. இதன் வெப்பநிலையை $48^{0}C$ ற்கு உயர்த்தும் போது அளவிடைப்புள்ளி எவ்வளவால் உயரும்.? (கண்ணாடியின் ஏகபரிமாண விரிகைத்திறன் $9 \times 10^{-6}\ ^{0}C^{-1}$ இரசத்தின் உண்மை விரிகைத்திறன் $180 \times 10^{-6\ 0}C^{-1}$)

11. $1000Cm^3$ முடிய பாத்திரத்தினுள் இரசம் இடப்பட்டு வெப்ப மேற்றப்பட்டது. அப்போது பாத்திரத்திலிருந்த வளியின்கனவளவில்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மாற்றம் ஏற்படவில்லை. ஆயின் பாத்திரத்தில் இருந்த இரசத்தின் கனவளவுயாது?(பாத்திரத்தின் ஏகபரிமாணவிரிகைத்திறன்$9x10^{-6}{}^0C^{-1}$, இரசத்தின் கனவளவு விரிகைத்திறன் $1.8 \times 10^{-4}{}^0C^{-1}$)

12. வளியின் ஒரு பந்தின் நிறை 10g ஆகும். $15^0C$ நீரில் இதன் நிறை 6g, $65^0C$ யில் உள்ள நீரில் இதன் நிறை 6.05g, நீரின் கனவளவு விரிகைத்திறனை காண்க.? (பந்தின் ஏகபரிமான விரிகைத்திறன் $9 \times 10^{-6}{}^0C^{-1}$, $15^0C$ யில் நீரின் அடர்த்தி $1gCm^{-3}$)

13. 1m நீளமான இரு முனையும் மூடிய குழாயின் நடுவில் 0.1m நீளமான இரச இழை ஒன்று இருக்கத்தக்கதாக கிடையாக அது பிடிக்கப்பட்டுள்ளது. பின்னர் அது நிலைக்குத்தாக பிடிக்கப்படும் போது இரச நிரல் இறங்கும் தூரம் யாது.? (ஆரம்பத்தில் குழாயினுள் இருந்த அமுக்கம் 0.76mHg ஆகும்)

14. சீரான குறுக்குவெட்டுமுகமுள்ள ஒரு இரு முனையும் மூடிய கண்ணாடிக்குழாயின் மத்தியில் 5Cm நீளமான இரச நிரலொன்று உள்ளது. குழாய் கிடையாக இருக்கும் போது இரச நிரல் மத்தியில் இருக்க காணப்பட்டது. இக்குழாய் தற்போது நிலைக்குத்துடன் $60^0$ சாய்வாக வைக்கும்போது வளிநிரலின் நீளங்கள் முறையே 46Cm, 44.5Cm ஆகக் காணப்பட்டது எனின் ஆரம்ப நிலையில் குழாயினுள் அமுக்கம் யாது.? (அறை வெப்பநிலை $30^0C$)

15. 100Cm நீளமான குழாயின் மத்தியில் 10Cm இரசநிரல் இருக்குமாறு இருமுனையும் மூடிய குழாய் கிடையாக வைக்கப்பட்டுள்ளது. அப்போது குழாயினுள் வளிமண்டல அமுக்கம் நிலவுகின்றது. அப்போது வெப்பநிலை $27^0C$ ஆகும். பின்னர் குழாயின் ஒரு பக்கம் $0^0C$ யிலும் மறுபக்கம் $127^0C$ யிலும் நிலை நிறுத்தப்படுகின்றது எனின் இரசநிரல் அசைந்த தூரம்.? $0^0C$ யில் அமுக்கம் என்பவற்றை காண்க.? (இரசவிரிவு கண்ணாடி விரிவு புறக்கணிக்கத்தக்கது)

16. மின்குமிழ் ஒன்றின் கனவளவு $250Cm^3$. அது $1 \times 10^{-3}$ mmHg அமுக்கத்திலும் $27^0C$ யிலும் உருவாக்கப்பட்டுள்ளது எனின் குமிழினுள் உள்ள மூலக்கூறுகளின் எண்ணிக்கை யாது.? (போல்ட்ஸ்மானின் மாறிலி $K = 1.38 \times 10^{-23}JK^{-1}$, இரசத்தின் அடர்த்தி $13600Kgm^{-3}$ )

17. மூடிய ஒரு உருளையின் கனவளவு $0.02m^3$, இதனுள் Ne, Ar வாயுக்கள் அடைக்கப்பட்டுள்ளது. இதனுள் $1 \times 10^5 Nm^{-2}$ அமுக்கமும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

27°C வெப்பநிலையும் நிலவுகின்றது. உருளையில் உள்ள வாயுக்கலவையின் திணிவு 28g எனின் ஒவ்வொன்றினதும் தனித்தனி திணிவை காண்க.? $M_{N_2} = 20$, $M_{Ar} = 40$

18. 

இலட்சிய வாயுவை கொண்ட ஒரு முசலத்தை அமைப்பு காட்டுகின்றது. இதனுள் 300K இல் வாயு அடைக்கப்பட்டுள்ளது. விற்சுருளுடன் ஆன ஆடு தண்டின் குறுக்குவெட்டு பரப்பு $8 \times 10^{-3} m^2$ உம் இதன் ஆரம்ப கனவளவு $2.4 \times 10^{-3} m^3$ உம் ஆகும். தற்போது ஆடுதண்டானது வெளி நோக்கி 0.1m இழுக்கப்படுகின்றது. ஆரம்பத்தில் முசலத்தினுள் அமுக்கம் வளிமண்டல அமுக்கத்திற்கு சமன் எனின் தற்போது முசலத்தினுள் வெப்பநிலை யாது.? (விற்சுருள் மாறிலி $8000 Nm^{-1}$)

19. $5\ell$ குடுவையினுள் 1.4g நைதரசன் நீர் ஆவி கலவை 1800K இல் உள்ளது. இதில் 30% நீராவியாகக் காணப்படுகின்றது. நீராவியும் இலட்சிய நடத்தையை காட்டின் குடுவையினுள் மொத்த அமுக்கம் யாது.?

20. ஒரு திரவம் கொண்ட பாத்திரத்தினுள் $30\ell$ இலட்சியவாயு அடைக்கப்பட்டு உள்ளது. அப்போது அதன் வெப்பநிலை 0°C, அமுக்கம் 1 atm. இப்பாத்திரத்தில் உள்ள கசிவு காரணமாக சிறிதளவு வாயு வெளியேறுகின்றது. இதனால் அமுக்கம் 0.22atm ஆக மாறுகின்றது. அப்போது வெப்பநிலையில் மாற்றம் ஏற்படவில்லை எனின் வெளியேறிய வாயுவின் திணிவு யாது.? (வாயுவின் அடர்த்தி STP யில் 1.3g/l)

21. ஒரு குறிப்பிட்ட பிரதேசத்தில் $1Cm^3$ கனவளவில் 5 வாயு மூலக்கூறுகள் சராசரியாக காணப்பட்டன. அப்போது வெப்பநிலை 3K ஆகும். எனின் அந்நிலையில் வாயு மூலக்கூறுகளின் சராசரி அமுக்கம் யாது.? (போட்ஸ்மானின் மாறிலி $= 1.38 \times 10^{-23} JKg^{-1}$)

22. 0°C யில் $Co_2$ வாயுவின் அமுக்கம், அடர்த்தி முறையே $1 \times 10^5 Nm^{-2}$, $1.98 Kgm^{-3}$ ஆகும். எனின் 30°C யில் மூலக்கூறுகளின் இடைவர்க்க மூலக்கதியை காண்க.? (அமுக்க மாற்றம் இல்லை எனக் கொள்க)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

23. $27^0C$ யில் 1mmHg அழுக்கத்தை கொண்ட இலட்சிய வாயுவின் $1cm^3$ இல் உள்ள மூலக்கூறுகளின் எண்ணிக்கை யாது?($27^0C$யில் மூலக்கூறு ஒன்றின் இயக்கசக்தி $4 \times 10^{-14}\ gcm^2s^{-2}$ ஆகும். இரசத்தினடர்த்தி $13.6gcm^{-3}$)

24. ஒட்சிசன் மூலக்கூறுகளின் சராசரி வர்க்க மூலவேகம் $819^0$ C யில் $920ms^{-1}$ எனின் $40^0C$ யில் Ar மூலக்கூறுகளின் சராசரி வர்க்க மூலக்கதி யாது.? (ஒட்சிசன் சார் மூலக்கூற்றுத்திணிவு 32, Ar இன் சார்மூலக்கூற்று திணிவு 40)

25. 32 சார்மூலக்கூற்று திணிவுள்ள ஒருவாயு $47^0C$யிலும் 64 மூலக்கூற்றுதிணிவுள்ள ஒரு வாயு அதே வேகத்தை கொண்டுள்ளது எனின் மற்றைய வாயுவின் வெப்பநிலை யாது.?

26. புவி மேற்பரப்பில் ஐதரசனின் இடைவர்க்க மூலக்கதியும். தப்பு வேகமும் சமனாக இருக்கும் வெப்பநிலை யாது.?
(புவியின் ஆரை $6.4 \times 10^6m$)

27. இரு இலட்சிய வாயுக்களின் உறுதி வெப்பநிலைகள் முறையே $T_1$. $T_2$ இவற்றை கலக்கும் போது சக்தியிழப்பு எதுவும் ஏற்படவில்லை. இவற்றின் மூலக்கூற்று திணிவுகள் முறையே $M_1$, $M_2$ இவற்றின் மூலக்கூறுகளின் எண்ணிக்கை முறையே $n_1$, $n_2$ எனின் கலவையின் பொது வெப்பநிலை யாது.?

28. 

படத்தில் காட்டப்பட்ட குழாயினுள் வளி சிறை பிடிக்கப்பட்டுள்ளது. அப்போது இரச நிரலின் உயரம் 75CmHg ஆகும். மேலேயுள்ள வளி சிறைக்குள் சிறிதளவு வளி செலுத்தும் போது இரசநிரல் 5Cm இறங்குகின்றது எனின் உட்செலுத்தப்பட்ட வளியின் திணிவு யாது.? (வளியின் மூலக்கூற்று திணிவு 32, குழாயின் நீளம் 1m குறுக்கு வெட்டுபரப்பு $2Cm^2$)

29. $30\ell$ கனவளவுள்ள உருளை $27^0C$ யிலும் 15 atm அமுக்கத்திலும் ஒட்சிசன் வாயுவை கொண்டுள்ளது. உருளையில் வாயுக்கசிவு காரணமாக அமுக்கம் 4 atm ஆல் குறைந்தது. அப்போது வெப்பநிலை $17^0C$ எனின் வெளியேறிய வாயுவின் திணிவு யாது.?



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

30. ஒரு மூடிய குடுவைக்குள் 7Kg நைதரசனும் 11Kg காபனீர்ஒட்சைட்டும் 290K இல் அடைக்கப்பட்டுள்ளது. அப்போது தொகுதியின் அமுக்கம் 1 atm ஆயின் வாயுக்கலவையின் அடர்த்தி யாது.?

31. ஒரு குடுவையினுள் 10g வாயு $20^0C$ யில் இருக்கின்றது. வெப்பநிலை $70^0C$ ஆக உயரும் போது சிறிதளவு வாயு வெளியேறியது. குடுவையினுள் அமுக்க மாற்றம் நிகழவில்லை எனின் வெளியேறிய வாயவின் திணிவு யாது.?

32. கெல்வின் வெப்பநிலையும், பரனைட் வெப்பநிலையும் சமனாகவுள்ள வெப்பநிலை யாது.?

33. ஒரு வெப்பமானியின் அளவிடையில் பனிக்கட்டியில் 10.3CmHg யும் கொதிநீராவியில் வைக்கும்போது 26.8CmHg உம் குளிர்சாதனப் பெட்டியில் வைத்தபோது 6.5CmHg வாசித்தது எனின் குளிர்சாதனப்பெட்டியில் வெப்பநிலை யாது.?

34. 0.5m நீளமும் $4 \times 10^{-6}m^2$ குறுக்கு வெட்டு பரப்புமுள்ள கோல் $100^0C$ யில் பேணப்பட்டு நிலைக்குத்தாக தொங்குகின்றது. இதில் கீழ் முனையில் ஒரு திணிவு கட்டித் தொங்கவிடப்பட்டுள்ளது. கோலின் யங்கின் மட்டு $Y = 1 \times 10^{11} Nm^{-2}$, $\alpha = 1 \times 10^{-5} K^{-1}$ எனின் கட்டிவிடப்பட்ட திணிவு, கோலிலுள்ள மீளியல்சக்தி என்பவற்றை காண்க.?

35. A, B என்னும் இலட்சிய வாயுக்களைக் கொண்ட குடுவைகள் முறையே $2\ell$, $4\ell$ கனவளவும் 300K, 30K வெப்பநிலையையும் $2 \times 10^5 Nm^{-2}$, $4 \times 10^5 Nm^{-2}$ அமுக்கத்தையும் கொண்டவை. இவை தற்போது ஒரு புறக்கணிக்கத்தக்க குழாயால் இணைக்கப்படும் போது தொகுதியின் புதிய அமுக்கம், வெப்பநிலை என்பவற்றை காண்க.?

36. 100g திணிவுடைய கலோரிமானிக்குள் 200g நீர் கொண்ட பனிக்கட்டி இடப்பட்டுள்ளது. இதற்குள் $100^0C$ யில் கொதிநீராவியை செலுத்த தொகுதியின் வெப்பநிலை $50^0C$ ஆக குறைந்தது. அப்போது தொகுதியின் திணிவு 330g எனின் ஆரம்பத்தில் இருந்த நீரின் திணிவு யாது.? ( கலோரி மானியின் தன்வெப்ப கொள்ளளவு $= 0.42 \times 10^3 JKg^{-1}K^{-1}$, பனிக்கட்டியின் உருகலின் தன்மறை வெப்பம் $= 3.36 \times 10^5 JKg^{-1}$, ஆவியாதலின் தன்மறை வெப்பம் $= 22.5 \times 10^5 JKg^{-1}$, நீரின் தன்வெப்பக் கொள்ளளவு $= 4200 JKg^{-1}K^{-1}$)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

37. 0.1Kg திணிவுடைய ஒரு உருக்கு கோளம் 10m உயரத்திலிருந்து போடப்படுகின்றது. 7m உயரத்தில் உள்ள போது அக்கோளத்தில் ஏற்பட்ட வெப்பநிலை மாற்றம் யாது.? (உருக்கின் தன்வெப்பக் கொள்ளளவு = $462JKg^{-1}{}^{0}C^{-1}$)

38. 20g நீர் 30°C இல் உள்ளது. இது 5g திணிவுடைய –10°C இல் உள்ள பனிக்கட்டியுடன் கலக்கப்படும் போது கலவையின் வெப்பநிலை யாது.? (பனிக்கட்டியின் உருகலின் தன்மறை வெப்பம் = 80Cal/g, பனிக்கட்டியின் தன்வெப்ப கொள்ளளவு = 0.5Cal/g°C, நீரின் தன்வெப்பக் கொள்ளளவு = 1 Cal/g°C)

39. 20Kg திணிவுடைய ஒரு பெட்டி மாறா வேகம் $10Kmh^{-1}$ உடன் இயங்குகின்றது. பெட்டிக்கும் தரைக்கும் இடையிலான உராய்வுக் குணகம் 0.6 ஆகும். உராய்வால் 60% சக்தி வெப்பமாகின்றது எனின் பெட்டியில் ஏற்பட்ட வெப்பநிலை அதிகரிப்பு மணித்தியாலத்திற்கு யாது.? (பெட்டியின் தன் வெப்ப கொள்ளளவு = $420JKg^{-1}$)

40. $4200JKg^{-1}$ தன்வெப்பகொள்ளளவுடைய நீரின் 5Kg இன் வெப்பநிலை 20°C இலிருந்து 50°C இற்கு உயர்த்தும் போது அதன் அகச்சக்தியில் ஏற்படும் மாற்றம் யாது.?

41. 10Kg வாயுவின் வெப்பநிலை 20°C இல் இருந்து 140°C வரை மாறா அமுக்கத்தில் உயர்த்தப்படுகின்றது. $C_p = 1042JKg^{-1}K^{-1}$, $C_v = 743\ JKg^{-1}K^{-1}$ எனின் அகச்சக்தி அதிகரிப்பு, வாயுவால் செய்யப்பட்ட வெளிவேலை என்பவற்றை காண்க.

42. 

$2.49 \times 10^4 J$ சக்தி மூலம் ஒரு கொள்கலன் வெப்பமேற்றப்படுகின்றது. அக்கொள்கலனின் கனவளவு $0.0083m^3$, வெப்பநிலை 300K, அமுக்கம் $1.6 \times 10^6 Nm^{-2}$ எனின் வெப்பமேற்றியபின் இறுதியமுக்கம், வெப்பநிலை என்பவற்றை காண்க.? ($C_p = 5R/2$)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

43. $20m^3$ இலட்சிய வாயுவொன்று $12^oC$ யில் உள்ளது அமுக்கம் 100KP ஆகும். திடீர் என சேறலில்லா முறை மூலம் கனவளவு $0.5m^3$ ஆக மாற்றப்படுகின்றதாயின் புதிய வெப்பநிலை, அமுக்கம் என்பவற்றை காண்க.

44. இலட்சிய வாயுத்தொகுதியின் கனவளவு $V_1 = 0.5m^3$, அமுக்கம் 0.5atm இத்தொகுதி சேறலில்லாச் செய்முறை மூலம் நெருக்கப்பட்டு கனவளவு $V_2$ அமுக்கம் $P_2$ ஆக மாற்றப்படுகின்றது. பின்னர் கனவளவு $V_2$ ஆக இருக்கத்தக்கதாக ஆரம்ப வெப்பநிலைக்கு குளிர வைக்கப்படுகின்றது. அப்போது அமுக்கம் $P_1 = 10$ atm எனின் $V_2$ , $P_2$ ஐ காண்க? ($\gamma = 1.4$)

45. $0^oC$ யிலுள்ள ஒரு வாயுத் தொகுதியின் கனவளவானது சேறலில்லாச் செய்முறையின் மூலம் நெருக்கப்பட்டு கனவளவு 1/5 பங்காகக் குறைகின்றது. ஆயின் மூலக்கூறின் சராசரி இயக்கசக்தி யாது? (போட்ஸ்மான் மாறிலி $1.38 \times 10^{-23} Jk^{-1}$)

46. 8g ஒட்சிசன் வாயு $27^oC$ யிலும் 1 atm அமுக்கத்திலும் ஒரு உருளையினுள் அடைக்கப்பட்டுள்ளது. அதன் அமுக்கம் வெவ்வேறு செயன் முறையின்போது மாறுபடுவதை அருகிலுள்ள P-V வரைபு காட்டுகின்றது. பின்வரும் செய்முறையின்போது,




a) வாயுமாறா அமுக்கத்தில் $127^oC$ இற்கு வெப்பமேற்றப்படல்

b) சமவெப்பமாற்றத்திற்கு உட்பட்டு ஆரம்பக் கனவளவை அடைதல்

c) மாறாக்கனவளவில் ஆரம்ப வெப்பநிலைக்கு குளிரூட்டல்.

பின்வரும் வினாக்களுக்கு விடைதருக

i) A $\rightarrow$B ற்கு செல்ல வழங்கப்பட்ட வெப்பசக்தி யாது?

ii) A $\rightarrow$B ற்கு செல்லும்போது வாயுவால் செய்யப்பட்ட வேலையாது?

iii) B $\rightarrow$C ற்கு செய்யப்பட்ட வேலை யாது?

iv) C $\rightarrow$A ற்கு வெளியேறிய வெப்பசக்தி யாது?

(ஒட்சிசனின் தன்வெப்பக்கொள்ளளவு $670\ Jk^{-1}K^{-1}$)

உதவி:- சம வெப்பமாற்றத்தின்போது ($\Delta\omega = nRT\ln(V/V_o)$)

மாறா அமுக்கத்தில் தன்வெப்பக் கொள்ளளவு $\frac{7R}{2}$



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

47. 3mol வாயுத்தொகுதியானது 300K இல் சமவெப்பமாற்றத்திற்கு உட்படுத்தப்படும்போது அதன் கனவளவு ஐந்து மடங்காகின்றது. பின்னர் மாறாக்கனவளவில் வெப்பம் வழங்கப்படுகின்றது. அப்போது அமுக்கம் ஆரம்ப அமுக்கத்திற்கு சமனாகின்றது. வழங்கப்பட்ட வெப்பம் 83.14 kJ எனின் $C_p/C_v$ என்னும் விகிதத்தைக் காண்க?

48. ஒரு மூடிய பெட்டியினுள் வாயுத்தொகுதி ஒன்று இரண்டாகப் பிரிக்கப்பட்டு




அசையத்தக்க ஒரு அமைப்பில் பிரிக்கப்பட்டுள்ளது. முதலாவது பகுதியினுள் அமுக்கம், கனவளவு முறையே P, 5V யும் இரண்டாவது பகுதியினுள் 8P, V யும் ஆகும். நடுத்தட்டு ஆனது சிறிய மாற்றத்திற்கு ஊடாக அணுகும்போது,

i) சமவெப்பமாற்றம்

ii) சேறலில்லாமாற்றம் என்பவற்றுக்கு உட்படுத்தும்போது புதிய அமுக்கம், கனவளவு என்பவற்றை காண்க? ( r = 1.5 )

49. 50cm தடிப்புடைய அடியைக் கொண்ட ஒரு உருளை வடிவப் பாத்திரத்தில் திரவம் ஊற்றப்பட்டு வெப்பமேற்றும்போது 5 நிமிடத்திற்கு 1m திரவ இறக்கம் ஏற்படுகின்றது. பாத்திரத்தின் அடியின் கடத்துதிறன் $0.12 wm^{-1}K^{-1}$ திரவ ஆவியின் தன்மறை வெப்பம் $540 Jk^{-1}$ எனின் வெப்பம் வழங்கும் முதலின் வெப்பநிலை யாது? (திரவத்தின் அடர்த்தி $1 kg^{-3}$ )




50.




150cm நீளமான ஒரு கோல் ஒரு முனை 100°C உள்ள ஆவியாலும் மறுமுனை 0°C யில் உட்பட திரவம் ஒன்றின் பனிக்கட்டியாலும் நிலை நிறுத்தப்பட்டுள்ளது. கோலின் ஒரு குறிப்பிட்ட இடத்தில் 200°C வெப்பம் வழங்கப்படுகின்றது.

இரு முனையிலும் உள்ள திரவம் நிலைமாற்றம் உள்ள திரவம் நிலைமாற்றம் அடைகின்றதாயின் கோலின் எவ்வளவு தூரத்தில் 200°C வெப்பம் வழங்கப்பட்டு இருக்கும். (திரவத்தின் ஆவியாதல் மறைவெப்பம் 100°C யில் $5.4 \times 10^{-3} Jkg^{-1}$ திரவப் பனிக்கட்டியின் உருகுவின் தன்மறை வெப்பம் $80 \times 10^{-3} Jkg^{-1}$ )



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

51. $20cm^2$ குறுக்கு வெட்டுப் பரப்புடைய இரு கோல்கள் முனைக்கு முனை பொருத்தப்பட்டுள்ளது. இவற்றின் முனைகள் $100^oC$, $0^oC$ இல் நிலைநிறுத்தப்பட்டுள்ளது.




இதன் மூலம் $80 \times 10^3 J\ kg^{-1}$ உருகலின் தன்மறை வெப்பம் உள்ள ஒரு திரவப்பனிக்கட்டியின் 684g ஐ நிலைமாற்றம் அடையச் செய்ய ஒரு மணித்தியாலம் தேவைப்படுகின்றது. $100^oC$ இல் உள்ள கோலின் கடத்தாறு $0.25 wm^{-2}K^{-1}$ எனின் மற்றைய கோலின் கடத்தாறு யாது? சந்தியின் வெப்பநிலையாது?

52. A,B,C என்னும் 3 சமநீளக்கடத்திகள் முனைக்கு முனை பொருத்தப்பட்டு சேர்த்திக்கோலின் முனைகள் $100^oC$, $0^oC$ இல் நிலை நிறுத்தப்பட்டுள்ளது. இவற்றின் கடத்தாறுகள் முறையே2K,K, 0.5K ஆக இருக்கின்றன. ஆயின் சந்திகள் ஒவ்வொன்றிலும் வெப்பநிலை. சேர்த்திக் கோலின் வெப்பக்கடத்தாறு என்பவற்றைக் காண்க.

53. முறையே 0.125, 1.5, 1 $wm^{-1}{}^oC^{-1}$ வெப்பக் கடத்தாறு உடைய கடத்திகளால் ஆக்கப்பட்ட சேர்த்திக் கடத்தியின் ஒரு முனை $-10^oC$ மறு முனை $20^oC$ யில் உறுதி நிலையில் வைக்கப்பட்டுள்ளது. இவை $137m^2$ சமகுறுக்கு வெட்டுப்பரப்புடையது. எனின் இதன் சந்தியில் உள்ள வெப்பநிலைகள் முறையே யாது? இதனுடன் வலுப்பாய்ச்சல் யாது?




54. 2m நீளமான 1cm வெளி ஆரையும் 0.5cm உள் ஆரையும் உள்ள பொள்ளான உருளையினுள் 0.5cm ஆரையுள்ள பிறிதொரு திண்ம உருளை உட்புகுத்தப்பட்டுள்ளது.




இதன் ஒருமுனை $100^oC$ யிலும் மறு முனை $0^oC$ யிலும் நிலை நிறுத்தப்பட்டுள்ளது. உள் உருளையின் கடத்தாறு $0.9 \times 10^2 wm^{-2}K^{-1}$ பெரிய உருளையின் கடத்தாறு $0.12 \times 10^2 wm^{-2}K^{-1}$ எனின் இச் சோத்தி உருளையினூடு செல்லும் வெப்பப்பாய்ச்சல் வீதம் யாது? ஒவ்வொரு உருளையிலும் செல்லும் வெப்பப் பாய்ச்சல் வீதத்தின் வீதம் யாது?



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

55. படத்தில் காட்டப்பட்ட அமைப்பில் A,B,C என்பன வெவ்வேறு பதார்த்தத்தால் ஆக்கப்பட்ட அமைப்பாகும். இவற்றின் நீளங்கள் முறையே 46cm, 13cm, 12cm உம் ஒரு முனையின் வெப்பநிலை 100°C, 0°C, 0°C உம் ஆகும். இவற்றின் கடத்தாறுகள் $92wm^{-1}K^{-1}$, $26wm^{-1}K^{-1}$, $12wm^{-1}K^{-1}$ உம் குறுக்கு வெட்டுப்பரப்புகள் சமனாகவும் $4cm^2$ உம் ஆகும். எனின் சந்தியில் வெப்பநிலை, வெப்பப் பாய்ச்சல் (A) வீதம் என்பவற்றை காண்க?




56. சமநீளம் உள்ள AB, BD, DE என்பன ஒரே நீளமும், ஒரே குறுக்கு வெட்டுப்பரப்பும் $46wm^{-1}K^{-1}$ கடத்தாறும் உடையது. BC,CE,CD என்பவை அதே குறுக்குவெட்டு நீளம் கொண்டவை. இவற்றின் கடத்தாறு $92\ wm^{-1}K^{-1}$ ஆகும்.




A,E சந்தியின் வெப்பநிலை 60°C, 10°C ஆகும். எனின் B, C,D என்னும் சந்திகளில் வெப்பநிலை யாது?

57. 2mm தடிப்புடைய இரு கண்ணாடித்தட்டுகள் $0.63wm^{-1}k^{-1}$ வெப்பக்கடத்தாறு உடையது இவற்றின் நடுவே $0.049wm^{-1}k^{-1}$ வெப்பக்கடத்தாறுடைய கண்ணாடி வைக்கப்பட்டு வெப்பம் ஏற்றப்பட்டது பின்னர் தனி ஒரு 2mm தடிப்புடைய $0.63wm^{-1}k^{-1}$ வெப்பக்கடத்தாறுடைய கண்ணாடித்தட்டு வெப்பம் ஏற்றப்பட்டது அப்போது இரு நிலைகளிலும் அந்தங்களின் வெப்பநிலைகள் சமமாக இருந்தது. எனின் முதலாம் நிலையில் வெப்பப் பாய்ச்சல் வீதத்திற்கும் 2ம் நிலையில் நிலையில் வெப்பப்பாய்ச்சல் வீதத்திற்கும் இடையிலுள்ள விகிதம் யாது?



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

58. வீட்டினுள் குளிர்ச்சியைப் பேணுவதற்கு தற்போது பெரும்பாலும் பாவிக்கப்படும் சீமேந்து கல் ஒன்றின் அமைப்பை படம் காட்டுகின்றது. இதன் பரப்பளவு $1m^2$ இதன் கடத்தாறு 0. $8wm^{-1}k^{-1}$ இவற்றின் 0c வளியின் வெப்பக்கடத்தாறு 0.8$wm^{-1}k^{-1}$ இதன் தடிப்பு 0.05m உம் எனின் கல்லின் உட்பகுதியின் வெப்பநிலையை காண்க? வெப்பப் பாய்ச்சல் வீதம் யாது?




59. $4x10^{-3}m^2$ குறுக்கு வெட்டுப்பரப்புடைய ஒரு உருளைக்கு மின் வெப்பமாக்கி மூலம் வெப்பம் வழங்கப்படுகின்றது. அதன்வாயில் பொருத்தப்பட்ட ஆடுதண்டுடன் ஒரு விற்சுருள் இணைக்கப்பட்டுள்ளது. வெப்பமாக்கி மூலம் அதன் வெப்பநிலை 50K ஆல் உயர்த்தும் போது வாயுவில் 50J வேலை செய்யப்படுகின்றது.அப்போது ஆடுதண்டு 0.1m உயர்கின்றது வளிமண்டல அமுக்கம் $1x10^5Pa$ எனின் விற்சுருளியின் விற்சுருளி மாறிலி யாது? தொகுதியில் 2mol வாயு இருந்திருப்பின் மின் வெப்பமாக்கியின் வலு யாது?



60. 31.4kg நிறையை $1x10^{-3}m$ ஆரையும், $9x10^3kgm^{-3}$ அடர்த்தியும் உடைய ஒரு இழையில் கட்டித் தொங்கவிடப்பட்டு உள்ளது. இழையின் யங்கின் மட்டு $9.8 \times 10^{10}Nm^{-2}$, தன் வெப்பக் கொள்ளளவு $490Jkg^{-1}k^{-1}$ இழையின் வெப்பநிலை அதிகரிக்கப்படும்போது 75% சக்தி இழைக்கு வழங்கப்படுகின்றது. எனின் இழையில் ஏற்படும் சக்தி அதிகரிப்பு யாது?



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

61. அலுமீனிய உருளை ஒன்றின் திணிவு 100g இதனுள் 20g பனிக்கட்டி- 20°C யில் உள்ளது. இதற்கு செக்கனுக்கு 100J சக்தி என்ற வீதத்தில் வழங்கப்படுகின்றது. எனின் அடுத்து வரும் 4 நிமிடத்தில் அதன் வெப்பநிலை யாது? இங்கு நடை பெறும் நிலைமாற்றத்திற்கான வரைபை வரைக? பனிக்கட்டியின் தன்வெப்பக்கொள்ளளவு $0.5 \times 10^3 Jkg^{-1} °C^{-1}$, அலுமீனியத்தின் தன்வெப்பக்கொள்ளளவு $0.2 \times 10^3 Jkg^{-1} °C^{-1}$, பனிக்கட்டியின் தன்மறைவெப்பம் $80 \times 10^{-3} Jkg^{-1}$

62. 1 mol இலட்சிய வாயு ஒன்றின் P-V வரைபு படம் காட்டுகின்றது. இங்கு




A→B:- சேறலில்லாமாற்றம்.
B→C:- மாறாக் கனவளவில் குளிரவிடப்படுகின்றது.
C→D:- சேறலில்லாமாற்றம்.
D→A:- மாறாக்கனவளவில் வெப்பம் ஏற்படுகின்றது.
Aயில் 1000K வெப்பநிலையில் உள்ளது. B யில் அமுக்கம் $2/3P_A$, C யில் அமுக்கம் $1/3P_A$ எனின் பின்வருவனவற்றிற்கு விடையளிக்க?
(உதவி:- சேறலில்லா மாற்றத்தின்போது $\gamma = 5/3$ வேலை $W = \frac{R}{\gamma - 1}(T_1 - T_2)$

i) A→B யிற்குச் செல்லும்போது வாயுவால் செய்யப்பட்ட வேலை யாது?
ii) B→C யிற்கு செல்லும்போது வெப்ப இழப்பு யாது?
iii) D யில் வெப்பநிலை யாது?

63. 0.014kg நைதரசன் வாயு ஒரு மூடிய தொகுதியின் வெப்பநிலை 27°C இத் தொகுதியில் உள்ள வாயுவின் இடைவர்க்க மூலக்கதி இருமடங்காக வேண்டும். ஆயின் தொகுதிக்கு வழங்க வேண்டிய சக்தி யாது?
சராசரி மூலக்கூறுகளின் எண்ணிக்கை $N = 6x10^{23}$, $C_V = 5/2R$
போட்ஸ்மான்மாறிலி $= 1.38x10^{-23} Jk^{-1}$

64. 2mol கீலியம் வாயு 27°C யில் வாயு 20ℓ கனவளவைக் கொண்டுள்ளது. மாற அமுக்கத்தில் கனவளவு இருமடங்காக அதிகரிக்கப்படுகின்றது. பின்னர் வாயுத் தொகுதியினது சேலில்லா மாற்றத்தின் மூலம் மீண்டும் வெப்பநிலை ஆரம்ப நிலைக்கு மீழுகின்றது.
i) P–V வரைபை வரைக?
ii) வாயுத் தொகுதியின் இறுதி அமுக்கம் யாது?
iii) வாயுத் தொகுதியில் செய்யப்பட்ட வேலை யாது?


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

65. 10cmவிட்டமுடைய ஒர திண்மக் கோளம் 15°C வெப்பநிலையில் இருந்து 65°C யிற்கு உயர்த்தப்படுகிறது. அப்போது கோளத்தின் மையம் பற்றிய சடத்துவத்திருப்பம் அதிகரிக்கும் அளவு யாது? கோளத்தின் அடர்த்தி 7700kgm$^2$ இதன் ஏகபரிமான விரிகை திறன் 1.2 x 105°C$^{-1}$ சடத்துவத் திருப்பம் 2/5 ma$^2$

66. ஒரு உருளை ஒன்றினுள் 0°C யில் 100g திணிவும் 20°C யில் 99.79 திணிவ இரசத்தை கொண்டு இருக்கின்றது. எனின் உருளை ஆக்கப்பட்ட கண்ணாடிப் பதார்த்தத்தின் ஏகபரிமான விரிகை திறன் யாது? (இரசத்தின் கனவளவு விரிகை திறன் $\gamma = 18x10^{-5}$ °C$^{-1}$)

67. 50 l கொள்ளளவு உள்ள உருக்கு உருளையினுள் 273k யில் மண்ணெண்ணை முற்றுமுழுதாக கொள்ளப்பட்டுள்ளது. வெப்பநிலை 293k யிற்கு உயரப்படும் போது வெளியேறும் மண்ணெண்ணையின் திணிவு யாது? (0°C யில் மண்ணெண்ணையின் அடர்த்தி 8 x10$^2$ kg m$^{-2}$ இதன் கனவளவு விரிகைதிறன் 1 x 10$^{-30}$C$^{-1}$ உருக்கின் நீட்டல் விரிவுக்குணகம் =1.2 x 10°C$^{-1}$)

68. நீர் நிலை ஒன்றின் அடியில் உள்ள ஒரு வளிக்குமிழ் மேற்பரப்பை அடைகின்றது மேற்பரப்பில் உள்ள அமுக்கத்தைப் போல் மூன்று மடங்கு அமுக்கத்தை அடியில் உள்ள போது கொண்டு இருக்குமாயின் நீர் நிலையின் உயரம் என்ன? வளிமண்டல அமுக்கம் 1.01 x 10$^5$ Nm$^{-2}$ நீரின் அடர்த்தி 1000kg m$^{-3}$ .g = 9.8ms$^{-2}$

69. 100m$^3$ கனவளவுள்ள ஒரு அறை 10°C யில் உள்ளது அறைவெப்பநிலை 25°C ஆக உயரத்தொடங்கும்போது வெளியேறும் வாயுவின் திணிவு யாது? (வளிமண்டல அமுக்கம் 103kpa) 0°C யில் வளியின்அடர்த்தி 1.29kg m$^{-3}$

70. ஒருகடத்தியினூடான வெப்பப் பாய்ச்சல் வீதமானது $\frac{d\theta}{dt}$ ஆல் தரப்படும் இங்கு தரப்பட்ட குறியீடுகளை அடையாளம் காட்டுக K,A,L என்பவற்றை அடிப்படையாகக் கொண்டு வெப்பத்தடைR இற்கான கோவையைத் தருக 600°C யில் உள்ள ஒரு அறை $K_1$ $K_2$ என்னும் வெப்பக் கடத்தாறு உடைய இரு காவலிகளால் ஆக்கப்பட்டது வெளிமேற்பரப்பின் வெப்பநிலை 460°C,$K_1$= 0.8wm$^{-1}$K$^{-1}$, $K_2$= 1.6wm$^{-1}$K$^{-1}$ எனின் சந்தியின் வெப்பநிலை யாது?






Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

71. சமுத்திரத்தில் மிதக்கும் ஒரு பனிக்கட்டி 4.6m தடிப்பு உடையது இதன் வளியின் உள்ள மேற்பரப்பின் வெப்பநிலை 260K உம் மிதக்கும் நீரின் வெப்பநிலை 273K உம் ஆகும் பனிக்கட்டியின் உறைதலின் தன்மறை வெப்பம் $3.25 \times 10^5$ $Jkg^{-1}$ உம் இதன் கடத்தாறு $2.3 wm^{-1} k^{-1}$ உம் ஆகும் எனின்.

i) பனிக்கட்டியினூடான ஓரலகு குறுக்குவெட்டு பரப்பினூடு வெப்பபாய்ச்சல் வீதம் யாது?

ii) பனிக்கட்டியின் தடிப்பு அதிகரிக்கும் வீதம் யாது?

72. a) வெப்பவியலில் சிறந்த கடத்தியாக இருப்பவை ஏன் மின்னியலிலும் சிறந்த கடத்தியாக இருக்கின்றது.

b) சிறந்த வெப்பக்கடத்தி, அரிதில் வெப்பக்கடத்தி என்னும் பதங்களை விளக்குக.

c) ஏற்றம்பாயும் வீதம் (மின்னோட்டம்)வெப்பபாய்ச்சல் வீதம் ஆகியவற்றிற்கான சூத்திரங்களை தருக?

d) மின்தடையானது வெப்பத்தடைக்கு சமனாகுமா என விளக்குக.

e) $1m^2$ குறுக்கு வெட்டுப் பரப்பு உடைய 2mm தடிப்பு கொண்ட ஒரு கோலின் அந்தங்கள் 20° C, 5°C வெப்பநிலையில் நிலை நிறுத்தப்பட்டு இருக்கும் போது 1s இல் அதனூடு பாயும் வெப்பம் யாது? (கோலின் வெப்பக் கடத்தாறு $1.2 wm^{-1}k^{-1}$

73. இலட்சிய வாயுக்களின் இயக்கவியல் சமன்பாடு $P=1/3\rho c^{-2}$ எனக் காட்டுக. இதிலிருந்து போயிலின் விதியை உய்த்தறிக அறை ஒன்றில் 80 % $N_2$ உம் 20 % $O_2$ உம் காணப்படுகின்றது இவற்றின் மூலக்கூற்றுத்திணிவு முறையே 28, 32 உம் ஆகும்.

i) $N_2$ இனதும் $O_2$ வினதும் இடைவர்க்கமூலக்கூற்றிற்கான விகிதம் யாது?

ii) மூலக்கூறுகளின் $N_2$ இனதும் $O_2$ இனதும் அமுக்கங்களின் விகிதம் யாது?

iii) வினா (i) வெப்பநிலை10°C யில் இருந்து 100° Cயிற்கு செல்லும்போது இடைவர்க்க மூலக்கூற்றிற்கான விகிதம் காண்க?

74. அறை ஒன்றிலுள்ள $O_2$ இன் வெப்பநிலை அதன் மூலக்கூறுகளின் எண்ணிக்கையுடன் மாறுபடுவதற்கான வரைபு படத்தில் காட்டப்பட்டுள்ளது.

a) அறை வெப்பநிலை அதிகரிப்பின் பெறப்படும் வரைபை அதேவரைபில் வரைக.






Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

b) ஒட்சிசன் கொண்ட ஒரு உருளையின் கனவளவு $1.5 \times 10^{-3} m^3$ அதன் அமுக்கம் $1 \times 10^4$ Pa வெப்பநிலை 300K ஆகும். அவ் வாயு மாறிலி $R = 8.3 Jmol^{-1}K^{-1}$ இவகாதரோவின் மாறிலி $N_A = 6 \times 10^{23} mol^{-1}$, $O_2$ அன் மூலக்கூற்றுத் திணிவு $32 \times 10^{-3} kg\text{-}mol^{-1}$

i) $O_2$ இன் மூல் எண்ணிக்கையைக் காண்க.

ii) $O_2$ இன் மூலக்கூறுகளின் எண்ணிக்கையைக் காண்க.

ii) மூலக்கூறுகளின் இடைவர்க்க மூலுக்கதியைக் காண்க.

75. இடைவர்க்க மூலுக்கதி என்னும் பதத்தை விளக்குக மூலக்கூறுகளின் இயக்க சமன் கபட்டை, அமுக்கம், அடர்த்தி, இடைவர்க்க மூலக்கதி சார்பாக பெறுக. வளியில் ஒளியின் வேகம் $300 ms^{-1}$ எனின் வாயு மூலக்கூறுகளின் கதியைக் காண்க. $\gamma = 1.5$

76. ஈலியம் வாயுவானது ஒரு உருளையில் அடைக்கப்பட்டுள்ளது இவ்வுளையில் பொருத்தப்பட்டுள்ள ஆடுதண்டின் மூலம் வாயுவின் கனவளவு $1 \times 10^{-3} m^3$ ஆக குறைக்கப்படுகின்றது. அப்போது வெப்பநிலை 300K உம் அமுக்கம் $1 \times 10^5$ Pa உம் ஆகும்.

a) i. உருளையில் உள்ள மூலக்கூறுகளின் எண்ணிக்கை யாது?

ii. He வாயுவின் மொத்த இயக்க சக்தி யாது?

b) வெப்பநிலை 300K ஆக இருக்கத்தக்கவாறு தொகுதிக்கு வெப்பம் வழங்கப்படுகின்றது எனின் வாயுவின்

i. அகச்சக்தி மாற்றம்

ii. இடைவர்க்க மூலக்கதி

iii. அடர்த்தி என்பவற்றில் ஏற்படும் மாற்றம் என்பவற்றைக் காண்க?
(போட்ஸ்மான் மாறிலி = $1.4 \times 10^{-23} Jk^{-1}$)

77. ஒரு கனவுருவின் கனவளவு $0.1 m^3$ இதனுள் யுரேனியம் ஹெக்சாபுளோரைட் வாயு அடைக்கப்பட்டுள்ளது இது இலட்சிய நடத்தையைக் காட்ட வல்லது. இதனுள் அமுக்கம் $1 \times 10^6$ Paவெப்பநிலை 300K உம் ஆகும்.

i) $R = 8.3 Jmol^{-1}K^{-1}$ எனின் வாயுவின் மொத்த மூல் யாது?

ii) இதன் சார் மூலக்கூற்றுத் திணிவு 352 எனின் இதன் நிறை யாது?

iii) வாயுவின் அடர்த்தி யாது?

iv) வாயுவின் இடைவர்க்க மூலக்கதி யாது?



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

78. ஒரு மூல் வாயு 300K வெப்பநிலையிலும் $1x10^5$ அமுக்கத்திலும் $0.025m^3$ கனவளவை கொள்கின்றது. அவகாதரோ எண் $6x10^{23}$ $mol^{-1}$ எனின்
i) அகில வாயு மாறிலியைக் காண்க?
ii) போட்ஸ்மன் மாறிலி K ஐ காண்க?
iii)மூலக்கூறுகளின் சராசரி இயக்கசக்தி யாது?

79. $1x10^{-3}m^{-3}$ உருளையினுள் He வாயு 300K எனின் $2x\ 10^5Pa$ அமுக்கத்தைக் கொண்டுள்ளது.
i) உருளையில் உள்ள He இன் திணிவு யாது?
ii) He மூலக்கூறுகளின் எண்ணிக்கை யாது?
iii)He மூலக்கூறுகளின் மூலக்கூற்றுக் கதியைக் காண்க.
(He சார்மூலக்கூற்றுத்திணிவு = 4 அவகாதரோமாறிலி$6x10^{23}mol^{-1}$, $R=8.3Jmol^{-1}k^{-1}$)

80. a) இலட்சியவாயுச் சமன்பாடு PV = nRT ஆல் தரப்படும். இங்கு P- அமுக்கம் V - கனவளவு T - வெப்பநிலை எனின் n,R ஐ இனம் காட்டுக.

b) ஒரு உருளையினுள் அடைக்கப்பட்ட $N_2$ இன் அமுக்கம் $5x10^6Pa$, வெப்பநிலை$15^oC$ ஆகும். உருளையின் கனவளவு $0.04m^3$ பின்னர் சிறிது நேரத்தின் பின்னர் அமுக்கம் மாறாவெப்பநிலையில் $2x10^6Pa$, ஆக குறைகின்றது எனின், (3 வருடத்தின் பின்)
i) ஆரம்ப நிலையில் வாயுவின் திணிவு யாது?
ii) மூன்று வருடத்தில் வெளியேறிய வாயுவின் திணிவு யாது?
iii) ஒரு செக்கனில் வெளியேறும்$N_2$ இன்மூலக்கூறுகளின் எண்ணிக்கை யாது? (ஒரு வருடம் = $3.2x10^7$ S ஆகும்.)

81. a) இலட்சியவாயு எனும் பதத்தை விளக்குக?
b) $0.23m^3$ கனவளவிற்குள் $0.5x10^5pa$, அமுக்கத்திலும் 300K இலும் $N_2$ வாயு அடைக்கப்பட்டுள்ளதுஇதனுள் உள்ள மூல் எண்ணிக்கை யாது?
c) மூலக்கூறுகளின் இடைவர்க்க மூலக்கதியைக் காண்க?

82. A,B என்னும் சம கனவளவுள்ள பொட்கோளங்கள் புறக்கணிக்கத்தக்க கனவளவு உள்ள குழாய்களால் இணைக்கப்பட்டு 3g வாயுவை 300K இலும் $10^5pa$, அமுக்கதிதிலும் கொண்டுள்ளது. தற்போது Bயின் வெப்பநிலை 600K ஆக உயர்த்தப்படுகின்றது. Aயின் வெப்பநிலை 300K ஆக இருக்கத்தக்கதாக எனின்..
i) புதிய அமுக்கம் யாது?


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

83. a) உண்மை வாயுவிற்குரிய வந்தர் வாலின் சமன்பாடு $(P+\frac{a}{V^2})(v-b)=RT$ தரப்படும். இங்கு அமுக்கம் P, கனவளவு V, வெப்பநிலை T ஆகும். எனின் a, b, c, என்பவற்றை இனம் காட்டுக.

b) உண்மை வாயுவிற்கு இத்தொடர்பை பெறக் காரணம் யாது?

c) $CO_2$ வாயுவின் அடர்த்தி $344kgm^{-3}$ வெப்பநிலை $7.5x10^6$ pa, வெப்பநிலை 304K எனின்,

i) 1mol $CO_2$ வாயு கொள்ளும் கனவளவு யாது?

ii) ஒரு மூல் வாயு கொள்ளும் கனவளவு 36 எனின் a,b, யின் பெறுமதி யாது?

84. a) ஒரு மூல் இலட்சிய வாயுவின் PV = RT ஆல் தரப்படும். இதனை உண்மை வாயுவிற்கு மாற்றுக.

b) இவ்வாறு மாற்ற நீர் மேற்கொண்ட எடுகோள்கள் யாது?

c) $N_2$ வாயுவின் அமுக்கம் $= 3.4x10^6$ pa,

$N_2$ வாயுவின கனவளவு $= 9x10^{-3}m^3$

வந்தர் வாலின் மாறிலி $a = 1.4x\ 10^{-1}Pam^6mol^{-1}$

$b = 3.9x\ 10^{-5}Pam^3mol^{-1}$

i) இவற்றைப் பயன்படுத்தி $N_2$ இன் வெப்பநிலையைக் காண்க?

ii) இவ் வெப்பநிலையை இலட்சியவாயுஒன்றின் அதே அமுக்கம் கனவளவில் காண்க?

85. ஒரு இலட்சிய வாயுத் தொகுதி ஒன்றில் PV வரைபு காட்டப்பட்டுள்ளது இங்கு $V_1 = 1000cm^3$, $P_1 = 1.1x10^5Pa$, T = 300K ஆகும்..

i) AB பாதை வழியே செல்ல வெப்பமேற்றி 375K ஆக மாற்றப்படுகின்றது. எனின் புதிய கனவளவு $V_2$ யாது?

ii) BC பாதை வழியே சம வெப்ப மாற்றத்தின் மூலம் கனவளவு ஆரம்ப நிலையை அடைகின்றது. எனின் புதிய அமுக்கம் $P_2$ யாது?

iii) CA பாதைவழியே செல்வதற்கு தொகுதி குளிர விடப்படுகின்றது. எனின் செய்யப்பட்ட வேலை யாது?






Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

86. a) சம வெப்பமாற்றம், சேறலில்லா மாற்றம் என்னும் பதங்களை விளக்குக. இவை இரண்டிற்குமான வேற்றுமை, ஒற்றுமையை ஆராய்க. இவற்றுடன் தொடர்புடைய சமன் பாட்டை எழுதுக.

b) ஒரு வாயுத் தொகுதியானது நிலை Aயில் $P_1, V_1, T_1$ ஆகிய பரிமாணங்கள் உடையது. இது சேறலில்லா மாற்றத்தின் மூலம் B என்னும் நிலையை அடைகின்றது. அப்போது $P_2, V_2, T_2$ ஆக மாறுகின்றது. எனின் தொகுதி மாறாக் கனவளவில் வெப்பமேற்றப்பட்டு $P_3, V_2, T_1$ ஆக மாற்றப்படுகின்றது.

i) PV வரைபை தரப்பட்ட தரவைப் பயன்படுத்தி வரைக?

ii) $T_1 = 300K$, $V_2 = 4v$ ஆக இருப்பின் $T_2$ ஐக் காண்க. ($\gamma = 1.5$)

iii) $(P_1/P_3)^{\gamma} = P_1/P_2$ என நிறுவுக.

87. படத்தில் காட்டப்பட்ட வரைபானது ஒரு வாயு ஒன்றின் சம வெப்ப மாற்றத்தின்போது $T_1 = 4000k$, $T_2 = 2000k$, $T_3 = 1000k$, என்னும் வெப்பநிலைகளில் மாற்றம் அடைவதை காட்டுகின்றது. 1mol இலட்சிய வாயு ஒன்றின் பாதையளானது. ∴ A→ B, B → C, C → D, D → A, ஆகும். எனின் ஒவ்வொரு பாதையிலும் அகச்சக்தியில் ஏற்பட்டமாற்றம் வாயுவால் செய்யப்பட்ட வேலை, ஒவ்வொரு பாதையின் வழியே வழங்கப்பட்டசக்தி யாது?




88. 7gநைதரசனையும் 20g ஆர்கனையும் கொண்ட கலவையில் $N_2$இன் $\gamma$=1.4, Ar இன் $\gamma$= 1.67 எனின்

i) மாறாக்கனவளவில் ii) மாறா அமுக்கத்தில் தொகுதியின் வாயுவினதும், தன் வெப்பக் கொள்ளளவினதும் விகிதத்தைக் காண்க? ($N_2$, Ar இன் சார்மூலக்கூற்றுத்திணிவு 28, 40 )

89. இரண்டு மூல் He வாயுவின் அமுக்க-வெப்பநிலை வரைபு காட்டுகின்றது.

i) தொகுதியில் செய்யப்பட்ட வேலை

ii) தொகுதியில் அகச்சக்தி மாற்றம்

iii) தொகுதியில் ஏற்றபட்ட வெப்பசக்தி மாற்றம் (சம வெப்பமாற்றத்தில் வேலை $W = nRT \ln (v_2/v_1)$ ஆல் தரப்படும். $R = 8.32 \ Jmol^{-1} K^{-1}$



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

90. 3mol இலட்சியவாயு ( $C_p = 7/2\ R$)$P_A$ அமுக்கத்தையும் 100K வெப்பநிலையையும் கொண்டுள்ளது. இது சம வெப்பமாற்றத்திற்கு உட்படுத்தப்படுவதன் மூலம் கனவளவு இருமடங்காக்கப்படுகின்றது. பின்னர் மாறா அமுக்கத்தில் ஆரம்ப கனவளவுக்கு கொண்டுவரப்பட்டு இறுதியில் மாறாக்கனவளவில் ஆரம்ப அமுக்கத்திற்கு மாற்றப்படுகின்றது. எனின் சமவெப்பத்தின் வேலை $W = nRT \log (V_f/V_i)$.

i) P – V வரைபு, P – T வரைபு வரைக.

ii) தொகுதியில் மொத்த வேலையாது

iii) மொத்த வழங்கப்பட்ட சக்தி யாது?

91. வாயுத்தொகுதி ஒன்றின் PV வரைபு படத்தில் காட்டப்பட்டுள்ளது. தொகுதியில் ACB வழி செல்வதற்கு 200J சக்தி வழங்கப்பட்டுள்ளது. அப்போது 80J வேலை வாயுவால் செய்யப்படுகின்றது. பாதை ADB வழியே செல்வதற்கு 144J சக்தி வழங்கப்பட்டுள்ளது. A,Dயில் உள்ள அகச்சக்திகள் 40J, 88J எனின் பின்வரும் வினாக்களுக்கு விடையளிக்க?




i) Bயில் அகச்சக்தியைக் காண்க?

ii) ADB வழியான வேலை யாது?

iii) DB,ADவழியேயான பாதையில் வழங்கப்பட்டor வெளியேறிய சக்தி யாது?

iv) BA வழியான பாதையில் தொகுதியில் செய்யப்பட்ட வேலை 52J எனின் இத்தொகுதியில் வழங்கப்பட்ட/ வெளியேறிய வெப்பம் யாது?

92. a) V கனவளவு வாயு உருளையினுள் அடைக்கப்பட்டுள்ளது. உருளையுடன் மூலம் வளி உட்செலுத்தப்படகின்றது. ஆரம்பத்தில் வளியின் கனவளவு Vயும் அமுக்கம் $P_o$ உம் ஆகும். ஒவ்வொரு முறையும் ஆடுதண்ட செலுத்தப்படும்போது $V_o$ கனவளவு உட்செலுத்தப்படும் எனின் ஒருதடவை தண்டு பம்பும் போது உருளையினுள் உள்ள இறுதி அமுக்கம் யாது? 2 தடவை பம்பும்போது உருளையிலுள்ள அமுக்கம் யாது? n தடவை பம்பும்போது உருளையிலுள்ள அமுக்கம் யாது?



b) $V = 1\ell$ அகவும், $V_o = 200cm^3$ ஆகவும் இருக்கும்போது இறுதி அமுக்கம் 1½ ஆக இருக்கும் எனின் எத்தனை தடவை பம்பப்பட்டு இருக்கும்?



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# செய்முறை

## Part - I

01. $e = l\alpha\theta$
$= 10 \times 11 \times 10^{-6} \times (19 - 20)$
$= -11 \times 10^{-5}$ Cm சுருங்கும்

02. $e = l\alpha\theta$
$1 - 0.99967 = 1 \times 1.1 \times 10^{-5} \times \theta$
$\theta = 30^{0}C$
வெப்பநிலை $= 30 + 30 = 60^{0}C$

03. $l_{40} = lo(1 + 40\alpha)$
$l_{60} = lo(1 - 60\alpha)$
$l_{40}/l_{60} = (1 + 40\alpha)/(1 - 60\alpha)$
$l_{40} = \dfrac{10.02(1 + 40\alpha \times 2 \times 10^{-5})}{(1 - 60 \times 2 \times 10^{-5})}$
$= 10Cm$

04. வெப்பமேற்றும் போது விட்டம், நீளம், கனவளவு என்பன அதிகரிக்கும். ஆனால் திணிவு மாறாது. ஆகவே அடர்த்தி குறையும். எனவே கனவளவு அதிகரிக்கும் வீதம் அதிகரிக்கும்.
$[\gamma > \beta > \alpha]$

05. பதார்த்தத்தின் வகையில் தங்கியிருக்கும்

06. வெப்பநிலை

07. உருக்கு 1Cm புரியிடைக்கு
$1 \times [1 + \alpha_s(21 - 20)]$
$= (1 + \alpha_s)$ Cm
Cu கோலிற்குL $\times [1 + \alpha_c(21-20)]$
$= (1 + \alpha_c)L$

மற்றும் கோலின் வாசிப்பு 21°C இல்
$= L(1 + \alpha_c)/(1 + \alpha_s)$

08. $\alpha_s = \alpha_c$

09. $e_1 = l\alpha\theta$
$= 0.5 \times 2 \times 10^{-5} \times 200$
$= 2 \times 10^{-3}$ m
$e_2 = l\alpha\theta$
$= 0.5 \times 1.2 \times 10^{-5} \times 200$
$= 1.2 \times 10^{-3}$ m
$e = e_1 + e_2$
$= 0.32$ Cm

10. இரசத்தின் கனவளவு x என்க. உள்ளே உள்ள வாயுவின் கனவளவு மாறாததால்கண்ணாடியின் விரிவும் இரசத்தின் விரிவும் சமன்.
$V\gamma_c\theta = x\gamma_m\theta$
$X = V\gamma_c/\gamma_m = \dfrac{1000 \times 2.7 \times 10^{-5}}{1.8 \times 10^{-4}}$
$= 150$ Cm³

11. $\Delta l = \alpha l \Delta t$
$\Delta l / l = \alpha\Delta t$
ஆனால் யங்கின் மட்டு = $\dfrac{\text{தகைப்பு}}{\text{விகாரம்}}$
$= (F/A)/(\Delta l/l)$
$= Fl/\Delta lA$
ஆகவே $F = YA\Delta l/l = YA\alpha\Delta t$

12. $e_A = l\alpha\theta$ -------- 1
$e_B = 2\alpha\theta$ -------- 2
1, 2 $e_A/e_B = 1/2$



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

13. பாத்திர ஏகபரிமாண விரிகைத் திறன் $= \alpha$

$= 2 \times 10^{-6}\,^0C^{-1}$

திரவத்தின் கனவளவு விரிகைத் திறன் $= 6 \times 10^{-6}\,^0C^{-1}$

$= 3 \times 2 \times 10^{-6} = 3\alpha$

ஏகபரிமாண விரிகைத்திறனின் மூன்று மடங்கு. கனவளவு விரிகைத்திறன் என்பதால் திரவமட்டம் மாறாது.

14. $e = l\alpha\theta$

$e / l = \alpha\theta$

$(e / l) \times 100 = 100\,\alpha\theta$

$0.05 = 100 \times 100$

$\alpha = 5 \times 10^{-6}\,^0C^{-1}$

15. $\gamma = 3\,\alpha$

$= 3 \times 5 \times 10^{-6}$

$= 15 \times 10^{-6}$

$\therefore e = V\gamma\theta$

$(e / V) \times 100 = 100\,\gamma\theta$

$= 100 \times 15 \times 10^{-6} \times 100$

$= 0.15\%$

16. அதிகரிக்கும்

17. $e = l\alpha\theta$

$(e / l) \times 100 = 100 \times \theta$

$\theta = 1 / 100 \times 100$

$l = lo\,[1 + \alpha\theta]$

$l = lo\,[1 + 1/100]$

$l = 101\ lo / 100$

$l^2 = lo^2[101/100]^2$

$A = Ao\,[101/100]^2$

பரப்பு அதிகரிப்பு

$\Delta A = A - Ao$

$= Ao(101/100)^2 - Ao$

$= 201/(100)^2\ Ao$

பரப்பு அதிகரிப்பு வீதம்

$\therefore (\Delta A / Ao) \times 100 = 201/100$

$= 2.01\%$

18. வெளியேறியதிரவத்தின்கனவளவு = அதிகரித்ததிரவத்தின்கனவளவு –விரிவுற்றபோத்தலின்கனவளவு

$7.5 = 500x\gamma\ x100–500x3x10^{-5}x100$

$\gamma = 1.8 \times 10^{-4}\,^0C^{-1}$

19. $\rho_o = \rho_T\,(1 + \gamma T)$-------1

$\rho_o = \rho_T + \rho_T\gamma T$

$\rho_o - \rho_T = \rho_T\gamma T$----------2

$2/1 \Longrightarrow \rho_o - \rho_T / \rho_o = \gamma T / (1 + \gamma T)$

$P_o - \rho_T = \rho_o\gamma T / (1 + \gamma T)$

$\therefore \rho_T - \rho_o = -\rho\gamma T / (1 + \gamma T)$

20. $e = l\alpha\theta$

$e / l = \alpha\theta$

யங்கின்மட்டு = தகைப்பு / விகாரம்

$Y_2\alpha_2\theta = Y_1\,\alpha_1\theta$

$\therefore\ Y_1/Y_2 = \alpha_2/\alpha_1$

21) வெப்பமேற்றும் போது துளையினாரை அதிகரிக்கும். எனவே சடத்துவத்திருப்பம் அதிகரிக்கும். எனவே கோணவேகம் குறையும்.

22) இழுதி வெப்பங்களை $\theta$ என்க.

நீர் இழந்த வெப்பம் $= MS\theta$

பனிக்கட்டிபெற்றவெப்பம் $= MS\theta + ML$



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

$MS\theta = MS\theta + ML$

$0.3 \times 4200 \times (25 - \theta)$

$= 0.1 \times 4200 \times (\theta - 0) + 0.1 \times 3 \times 10^5$

$1260 \times 25 - 1260\,\theta = 420\,\theta + 3 \times 10^4$

$31500 - 30000 = 1680\theta$

$1500 / 1680 = \theta$

$\theta = 0.9\ ^{0}C$

23) $ML + MS\theta = MS\theta$

$0.1 \times 3 \times 10^5 + 0.1 \times 4200 \times (\theta - 0)$

$= 0.1 \times 4200 \times (80 - \theta)$

$3 \times 10^4 + 420\,\theta = 420 \times 80 - 420\,\theta$

$\theta = 23.3\ ^{0}C$

24) திரவத்தினுள் வாயுவாகக் காணப்படும்.

25) வாயுவின் வெப்பக்கொள்ளளவு

26) $V\alpha \sqrt{273}$ ----------1

$110\ V / 100\ \alpha \sqrt{T}$ --------2

$1/2 \Rightarrow 100/110 = \sqrt{273} / T$

$T = 300.3K$

ஆனால் $Q = MS\theta$

$= 32g \times 0.22 \times cal g^{-1}K^{-1} \times (300.3 - 273)$

$= 32 \times 0.22 \times 27.3 \times 4.2J$

27) $(60/100)\ PT = MS\theta$

$\theta = 0.6\ PT / MS$

28) நீர் பெற்ற வெப்பம் $= MS\theta$

$= 3 \times 4200 \times (77 - 27)$

$= 63 \times 10^4 Jmin^{-1}$

$M = V\rho = 3000Cm^3 \times 19Cm^{-3}$

$= 3000g$

$= 3Kgmin^{-1}$

தேவைப்படும் வாயுவின் அளவு

$= 63 \times 10^4 / 4 \times 10^7$

$= 15.75 gmin^{-1}$

29) $MS\theta = ML$

$2 \times 400 \times 500 = M \times 3.5 \times 10^5$

$M = 8/7\ Kg$

30) $\theta = nCp\Delta T$

$= (14/25) \times (7R/2) \times 40$

$= 70R$

31) கோலின் குறுக்குவெட்டுப்பரப்பு

32) $Q/t = K_1A_1 (\theta_2 - \theta_1) / l$

$= K_2A_2 ((\theta_2 - \theta_1) / l$

$A_1/A_2 = K_2/K_1$

33) $Q_1/t = K_1 [\pi(2R)^2$

$= \pi R^2] ((\theta_2 - \theta_1)/l$

$Q_2/t = K_2 [\pi R^2] (\theta_2 - \theta_1)/l$

$Q/t = K \pi (2R)^2 (\theta_2 - \theta_1) / l$

ஆனால் $Q = Q_1 + Q_2$

$K\pi(2R)^2 (\theta_2 - \theta_1) / l$

$= K_1\pi[(2R)^2 - R^2] (\theta_2 - \theta_1) / \ell$

$+ K_2\pi R^2(\theta_2 - \theta_1)/l$

$4K = 3K_1 + K_2$

$K = (3K_1 + K_2)/ 4$

34) $Q/t = KA (\theta_2 - \theta_1)/d$ ----------1

$Q_1/t = K_1 (A/ 2) (\theta_2 - \theta_1)/d$-----2

$Q_2/t = K_2 (A/2) (\theta_2 - \theta_1)/d$------3

$1 = 2 + 3 \Rightarrow$

$K = (K_1 + K_2)/ 2$



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

35) கடத்தாழ் அடர்த்தி. தன் வெப்பக் கொள்ளளவு என்பவற்றில் தங்கியிருக்கும்.

$K_1/K_2 = A_1/A_2$

$K_1 = K_2 \ [\ A_1 = A_2]$

36) தகைப்பு = Y x விகாரம்

$e_1 = l\alpha_1\theta$

$e_2 = l\alpha_2\theta$

தகைப்பு $= Y_1 \times l\alpha_1\theta$ ------1

தகைப்பு $= Y_2 \times l\alpha_2\theta$ -------2

1,2 $\Longrightarrow Y_1\alpha_1\theta = Y_2\alpha_2\theta$

$\therefore \quad Y_1/Y_2 = \alpha_2/\alpha_1 = 3:2$

37) a) $\gamma = 3\alpha$

b) $Cp > Cv$

c) குடான நாட்களில் வீரியம் வெளியே அளவீட்டை வரிப்பு குறைத்து காட்டும்.

38) (A) அளவிடும் கருவிகள் வெவ் வேறாக இருந்தாலும் அளவீட்டின் வித்தியாசம் சமனாக இருக்கும்.

$1°C = 1K = 1F$

(B) சமதிணிவு ஓரே தார்த்தம் என்பதால் கனவளவுகள் சமன். எனவே தட்டின் பரப்பதிகம். கோளத்தின் பரப்பு குறைவு எனவே குளிரல்வீதம் தட்டிற்கு உயர்வு.

(C) $E_1 = \sigma AT^4$

$\sigma \times \pi \times 1^2 \times (4000)^4$

$E_2 = \sigma \times \pi \times 4^2 \times (2000)^4$

எனவே $E_1 = E_2$

வெப்பக்கதிர்ப்பு சமன் ஆகவே

39) இரசத்தின் இறுதி கனவளவு $V_2 = V_0(1 + \gamma_2\theta)$

தின்மத்தின் இறுதிகனவளவு $V_1 = V_0(1 + \gamma_1\theta)$

$\therefore \ V_2/V_1 = (1 + \gamma_2\theta) / (1 + \gamma_1\theta)$

40) $P = \varepsilon\sigma AT^4$

$T = (P / A\varepsilon\sigma)^{1/4}$

41) $P = \sigma T^4$

$T = (P/\sigma)^{1/4}$

$= (6.27 \times 10^7 / 5.7 \times 10^{-8})^{1/4}$

42) $l = l_0(1 + \alpha\theta)$

$2l^2 = 2l_0^2(1 + \alpha\theta)^2$

$\therefore A = A_0(1 + \alpha\theta)^2$

$A = A_0(1 + 2\alpha\theta)$

$(A - A_0) / A_0 = 2\alpha\theta$

$(A - A_0)/A_0 \times 100 = 2 \times \theta \times 100$

$= 2 \times (1/100) \times \theta \times 100$

$= 2\theta$

($\theta$ = ஓரலகு எனக்கொண்ட பரப்பு அதிகரிக்கும் வீதம் 2%)

43) வெப்பநிலை மாறாததால் போயிலின் விதிக்கமைய.

$\therefore P_A V_A = P_B V_B$

44) அழுக்கம், கனவளவு, வெப்ப நிலை மாறும் இருக்கலாம்.

45) (i) இரு உடல்களும் சம தன்வெப்பக் கொள்ளளவும் சம திணிவும் உடையதாக இருப்பின் (A) சரி.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

(ii) $dQ/dt = MS\, d\theta/dt = K(\theta - \theta_0)$

இங்கு A யின் $d\theta/dt$ பெரிது எனவே S சிறிதாகும்.

B யின் $d\theta/dt$ குறைவு எனவே S பெரிது ஆகவே கூற்று (C) சரியானது.

46) வெப்பநிலை மாற்றம் இல்லை.

47) $PV^{\gamma}$ = மாறிலி

49) $PV^{\gamma}$ = மாறிலி

$PV = RT$

$P \times (RT/P)^{\gamma}$ = மாறிலி

$V = RT/P$

$P^{1-\gamma} T^{\gamma}$ = மாறிலி

$P_1^{1-\gamma} T_1^{\gamma} = P_2^{1-\gamma} T_2^{\gamma}$

$T_2^{\gamma} = (P_1/P_2)^{1-\gamma}$

$T_2 = T_1 (P_1/P_2)^{1-\gamma/\gamma}$

$= T_1 (P_2/P_1)^{\gamma-1/\gamma}$

50) $PV^{\gamma} = K$

$P_1V_1^{\gamma} = P_2V_2^{\gamma}$

$P_2 = P_1 (V_1/V_2)^{\gamma}$

51) $PV^{\gamma}$ = மாறி $PV = RT$

$RT/V \times V^{\gamma}$ = மாறி

$P = Rt/V$

$TV^{\gamma-1}$ = மாறி

$T_1V_1^{\gamma-1} = T_2V_2^{\gamma-1}$

$T_2 = T_1 (V_1/V_2)^{\gamma-1}$

54) $E = 3/2\ KT$

$K = 2E/3T$

$= JK^{-1}$

55) $R = l/KA$

$R_1 = l/2 / K_1A$

$R_2 = l/2/K_2A$

விளையுள் தடை $R = R_1 + R_2$

$L/KA = l/2/K_1A + l/2/K_2A$

$K = 2K_1K_2 / K_1 + K_2$

56) $K_1A(\theta_1 - \theta)/l = K_2A(\theta - \theta_2)/l$

$K_1(\theta_1 - \theta) = K_2(\theta - \theta_2)$

$K_1(\theta_1 - \theta) = 2K_1(\theta - \theta_2)$

Mdhy; $\theta_1 - \theta_2 = 12^0C$

$\theta_1 - \theta = 2[\theta - (\theta_1 - 12)]$

$\theta_1 - \theta = 2\theta - 2\theta_1 + 24$

$3\theta_1 - 3\theta = 24$

$3(\theta_1 - \theta) = 24$

$\theta_1 - \theta = 8^0C$

57) $K_1(\pi r_1^2)\Delta\theta / l_1 = K_2(\pi r_2^2)\Delta\theta / l_2$

$K_1r_1^2/l_1 = K_2r_2^2 / l_2$

$K_1/K_2 = l_1/l_2 \times (r_2/r_1)^2$

$= 2 \times 2^2$

$= 8$

58) பரப்பு = வேலை

$W = (2P - P) \times (2V - V)$

$W = PV$

59) $Vrms = \sqrt{3KT/m}$

$Vrms \propto \sqrt{T/m}$

$Vrms \propto \sqrt{200/2}$

$Vrms \propto \sqrt{T/32}$

½ ==> $Vrms / Vrms = \sqrt{200 / T \times 32/2}$

$T = 200 \times 16 = 3200K$

$= 2927^0C$

60) $Vrms \propto \sqrt{T}$

$Vrms \propto \sqrt{300}$

$V^1rms \propto \sqrt{1200}$

$V^1rms = 2Vrms$

61) $Vrms \propto \sqrt{T}$

$\therefore E \propto \sqrt{T}$

62) $d\theta / dt \propto A$ (பரப்பு)

∴ விட்டம் இரு மடங்கினால் பரப்பு நான்கு மடங்காகும்.

எனவே குளிரல் வீதம் 4 : 1



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

63) $C_P - C_V = R$

64) $Q_P = nC_P\Delta T = 743J$
$Q_V = nC_V\Delta T$
$Q_V = n(C_P - R)\Delta T$
$C_P - C_V = R$
$= nC_P\Delta T - nR\Delta T$
$= 743 - 5 \times 8.3 \times 2$
$= 660J$

65) சம வெப்பமேற்றத்திற்கு
$PV = P_i \times V/n$
$P_i = nP$ --------- 1
சேறலில்லா மாற்றத்திற்கு
$PV^{\gamma} = Pa \times (V/n)^{\gamma}$
$Pn^{\gamma} = Pa$--------- 2
$P_i / Pa = n^{1-\gamma}$

66) AB, CD சமவெப்பமாற்றம் (குறித்த வெப்பநிலை)
AD, BC சேறலில்லா மாற்றம் (மாறும் வெப்பநிலை)

67) A,C யில் சார்ளின் விதிப்படி
$2P \alpha T$
$P \alpha T^1$
$2P/P = T/T^1$
$T^1 = T/2$

68) போயிலின் விதிப்படி A,B யில் வெப்பநிலை சமன் ஆகும், ஆனால் சார்ளின் விதிப்படி A யில் வெப்பநிலை C யிலும் இரு மடங்காகும்.

69) சார்ளின் விதிப்படி
$2 \times 1 \times 10^5 / T = 1 \times 10^5 / 273$
$T = 546K$

70) வரைபானது A யில் ஆரம்பித்து A ஐ வந்தடைவதால் அகச்சக்தி ($du = 0$) பூச்சியம். ஏனவே முதலாம் விதிப்படி
$d_Q = -d_W$

71) $\Delta U = nC_V \Delta T$
$420 = 2 \times C_V \times 10$
$C_V = 21JK^{-1}mol^{-1}$

72) $d\theta = d_U + \Delta w$
$40 = d_U + 20$
$d_U = 20J$

சக்தி குறைவு ஏற்பட்டதால்
$d_{UF} = 70 - 20$
$= 50J$

73) $d\theta = d_U + dw$
$d\theta = 0$ (சேறலில்லா செய்முறை)
$\therefore d_U = -dw$
$d_U = -(-250)$
$= 250J$
( $\therefore$ வாயுவால் வேலை செய்தால் (-) பெறுமதி)

74) $PV^{\gamma} = K$
$P \times (m/\rho)^{\gamma} = K$
$P\rho^{-\gamma} = K$
$P\rho^{-\gamma} = P^1 (n\rho)^{-\gamma}$
$P^1 = n^{\gamma} P$



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

75) $E = \sigma AT^4$

$E = \sigma \times 4\pi R^2 T^4$

ஆனால்

$I = E / 4\pi r^2$

$I = \sigma \times 4 \pi R^2 T^4 / 4\pi r^2$

$I = \sigma R^2 T^4 / r^2$

$T^4 = Ir^2 / \sigma R^2$

$= \frac{1400 \times (1.5 \times 1011)^2}{5.67 \times 10^{-8} \times (7 \times 108)^2}$

$T^4 = 1.1338 \times 1015$

$T = 5803K$

77) $Rt = Ro\ (1 + \alpha\theta)$

$Ro = Rt / (1 + \alpha\theta)$

$Rt = 1 \times (1 + 27\alpha)$

$Ro = 1 / (1 + 27\ \alpha)$

$Rt = Ro\ (1 + \alpha\theta)$

$Rt = 2\ (1 + \alpha\theta)$

$Rt/Rt = (1 + \alpha t')/(1 + \alpha\theta)$

$= (1 + 0.00125 \times t')$

$/ (1 + 0.00125 \times 27)$

$2 = (1+0.00125t')/(1+0.00125x\ 27)$

$t' = 827^0C$

$t = 1100\ K$

78) எல்லா இலட்சிய வாயுவிற்கும் $C_p - C_v = R$

எனவே $a = b = R$

79) $E = \sigma T^4$

$Q = \sigma \times 300^4$

$Q' = \sigma \times 424^4$

$Q'/Q = (424/300)^4 = 4$

$Q' = 4Q$

80) சமவெப்ப மாற்றத்தின் போது $du = 0$

81) பரப்பு $= \frac{1}{2}(3V - V) \times (4P - P)$

$= \frac{1}{2} \times 2V \times 3P$

$= 3PV$

82) $PV = nRT$

$PV = 8/32 \times RT$

$PV = RT/4$

83) $E = \sigma T^4$

$E_1/E_2 = (T_1/T_2)^4 = (280/560)^4$

$= 1/16$

$E_2/E_1 = 16$

84) வரைபு ஒவ்வொன்றும் X அச்சுடன் அடைக்கும் பரப்பிலிருந்து $W_3 > W_2 > W_1$ ஆகும்.

85) டால்டனின் விதிப்படி

$P = P_1 + P_2 + P_3$

86) $d\theta / dt \propto (\theta - \theta_R)$

$d\theta / dt_1 = K \{[80+75/2] - \theta_R\}$

$d\theta / dt_2 = K \{[(75+70)/2] - \theta_R\}$

$d\theta / dt_3 = K \{[(70+65)/2] - \theta_R\}$

$\therefore t_3 > t_2 > t_1$

87) $P^{1-\gamma} T^{\gamma} = K$

$P^{1-\gamma} \times 300^{\gamma} = (P/8)^{1-\gamma} \times T^{\gamma}$

$T^{\gamma} = 300^{\gamma} \times 8^{1-\gamma}$

$T = 300 \times 8^{1-\gamma/\gamma}$

$= 300 \times 8\ (1 - 5/3 / 5/3)$

$= 300 \times 8^{-2/3 \times 3/5}$

$= 300 \times 8^{-2/5}$

$= 300 \times 8^{-0.4}$

$= 130.6K$

$= -142.4^0C$



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

88) $Vrms = \sqrt{3KT/M}$
$Vrms \alpha 1/\sqrt{M}$
$Vo_2 / VH_2 = \sqrt{2}/32 = 1 : 4$

89) $Cp - Cv = R$
$Cp/Cv = \gamma$
$\gamma Cv - Cv = R$
$(\gamma - 1) Cv = R$
$Cv = R/(\gamma - 1)$
ஆனால் $PV = nRT$
$P\Delta V = nR\Delta T$
$\Delta T = P\Delta V/nR$
$\Delta T = PV/nR$ $(2V - V = \Delta V)$
ஆனால் $\Delta U = nCv\ \Delta T$
$= n \times R/(\gamma - 1) \times PV / nR$
$= PV/(\gamma - 1)$

90) மாறுநிலை வெப்பநிலையை விட அறைவெப்பநிலை அதிகம் என்பதால் வாயுவாகக் காணப்படும்.

91) $PV = K$ ஐ பாவிக்க
$(H\rho_v g + h\rho_w g) x V = H\rho_w g \times 8V$
$H + h = 8H$
$h = 7H$

92) $3/2\ RT = E$
$E = 3/2 \times 8.31 \times 273$
$= 3.4 \times 10^3 J$

93) $d\theta/dt = K(\theta - \theta R)$
$MS\ (60 - 50) / 10$
$= K\ (60 + 50) /(2 - 25)$-----1
$MS\ (50 - \theta)/10$
$= K\ (50 + \theta)/(2 - 25)$---------
2

94) $C_P - C_V = 4150$---------- 1
$C_P/C_V = 1.4$
$C_P = 1.4C_V$ ---------- 2
1, 2 ===>$1.4\ Cv - C_V = 4150$
$0.4\ C_V = 4150$
$C_V = 10375\ JKg^{-1}K^{-1}$

95) வெப்பநிலை பூச்சியமாக உள்ளபோது மூலக்கூறுகளின் இயக்கம் நிறுத்தப்பட்டுவிடும். ஏனவே இயக்கசக்தி பூச்சியம்.

96) சக்தி $= \pi d^2/4$
$= \pi \times (20)^2 / 4 \times 10^3 \times 10^{-3} J$
$= \pi \times 400 / 4$
$= \pi \times 10^2 J$

97) $\beta = 2\alpha$
$r = 3\alpha$
$\therefore \alpha : \beta : r = \alpha : 2\alpha : 3\alpha$
$= 1 : 2 : 3$

98) $Vrms = \sqrt{3P/\rho}$
$= \sqrt{3KT/M}$

99) $\gamma_P = (P_t - P_o) / Pot$
$\gamma_P = (2P - P)/ P \times 10$
$\gamma_P = 1/10$

100) மூலக்கூறுகளுக்கிடையிலான கவர்ச்சி விசை


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# Part - II

01) $F = YA\alpha\theta$

$= 2 \times 10^{10} \times 0.8 \times 10^{-4} \times 1 \times 10^{-5} \times 10$

$= 1.6 \times 10^{2}$ N

02) $V = V_0 \gamma\theta$

$= 100 \times 6 \times 10^{-5} \times 100$

$= 0.6 Cm^3$

$V_{110^0C} = V + \triangle V$

$= 100.6 Cm^3$

03) A யிற்கு

$\triangle A = A\beta\theta$

$= A \times 2 \times 1.9 \times 10^{-5} \times (t-10)$----i

B யிற்கு

$\triangle A = A\beta\theta$

$= A \times 2 \times 1.1 \times 10^{-6} \times (t-20)$---2

1 = 2 ====> $t = -3.75^0C$

04) $e = L_1\alpha_1\theta + L_2\alpha_2\theta$

$0.191 - (30 \times 1.7 \times 10^{-5} \times 100)$

$+ (70 \times \alpha_2 \times 100)$

$\alpha_2 = 2 \times 10^{-5\ 0}C^{-1}$

Aயில்நெருக்கல்விசை$F_1 = Y_1 A\alpha_1\theta$

Bயில்நெருக்கல்விசை$F_2 = Y_2 A\alpha_2 e$

$F_1 = F_2$

$\therefore Y_2 = Y_1\alpha_1/\alpha_2$

$= 1.3 \times 10^{11} \times 1.7 \times 10^{-5} / 2 \times 10^{-5}$

$= 1.1 \times 10^{11}$ Nm$^{-2}$

05) $\alpha_A = e / \ell\theta$

$\alpha_B = 0.04/40 \times 100$

$= 1 \times 10^{-5\ 0}c^{-1}$

$\alpha_A = 0.05/25 \times 100$

$= 2 \times 10^{-5\ 0}c^{-1}$

சேர்த்தி கோலிற்கு $l_A + l_B = 50$----1

வெப்பமேற்றிய பின்

